333

Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.

வெண்டாமரை ௨.	1914-ம் ஆ பிப்ரவரி மீ	இதழ் ௨.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

வருஷ சந்தா ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
தபாற்கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Saigon Sinnaya Press, Pondicherry.

334

உள்ளுறை.

பக்கம்.

தமிழில் நூல்கள் எழுதுதல்: — பத்திராதிபர். 26

ரமணி (ஓர் காதற் கதை): — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. 29

சேர்ந்தாரைக் கொல்லி: — இதோபதேசி. 32

மாம்ஸ பக்ஷண நிராகரணம்: — ஸ்ரீமான் ஜி. சுவாமிநாதன் ஆசாரி, தமிழ்வித்வான், கோட்டாறு. 33

நன்னெறி: — ஸ்ரீமான் K. முத்துசாமி உடையார், உபாத்தியாயர், பாதாங்கி. 36

ஓர் வேண்டுகோள்: — ஸ்ரீமான் K. ஷண்முகவேலுபிள்ளை, உடுமலைப்பேட்டை. 39

மயிலச் சிலேடை வெண்பா: — வித்வான் ஸ்ரீமான் பு. அ. பெரியசாமிப்பிள்ளை, புதுவை. 39

திருத் தசாங்கம்:— செந்தமிழ்க்கவி ஸ்ரீமான் K. V இராமசந்திர ஐயர், திருவண்ணாமலை. 41

மங்கலம்:— வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர-சுப்பைய சுவாமிகள். 43

நியாயமாலா: — ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சிபுரம். 44

சமாசாரம். 46

பத்திரிகை வரவு. 48

இலக்ஷணாவலி. 5

குறிப்பு. — இப்பத்திரிகைக்குரிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்கக்கூடாது.

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை உ.] 1914-ம் ஆ பிப்ரவரி மீ [இதழ் உ.

இலௌகிகப் பகுதி.

புதுவை வித்வான் ம. ா-ா-ஸ்ரீ
பு. அ. பெரியசாமிப்பிள்ளை யவர்கள் கூறிய
கலைமகள் வாழ்த்துப்பா.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கடலுலகி லோங்கிவளர் புதுவைதனி லன்புடன்
கலைஞராற் புகழ டைந்தே
யிடரின்றி நடைபெறுங் கலைமகள் பத்திரிகை
யென்ஞான்றும் வாழி யதனை
யடலுட னடத்திவரு நற்றமிழ்ப் பண்டித
ராகுபங் காரு நிபுணர்
திடமுடன் வாழியப் பத்ரிகைக் குதவிபுரி
செல்வர்கள் வாழி மாதோ.

தமிழில் நூல்கள் எழுதுதல்.

இத் தமிழ்நாட்டில், பண்டைக்காலத்துப் பெரியோர்கள் இயற்றியுள்ள அரியபெரிய நூல்களனைத்தும் பெரும்பான்மையும் செய்யுள் நடையாகவே அமையப்பெற்றவை. அவை கற்றோர் சிலர்க்கே பெரிதும் பயன்றரக்கூடியன.

கற்றோர்க்கேயன்றி மற்றையோர்க்கும் எளிதிற் பயன்படுமாறு, நூல்கள் உரைநடையாக வெழுதுதல், இக்காலத்து நிரம்ப நன்மையைத் தருமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அங்ஙனமே இப்போது உரைநடையாக இக்காலத்திற் கேற்றபடி நூல்கள் பல எழுதப்பட்டுவருகின்றன. ஆனால் நூல் எத்திறத்ததாயிருத்தல் வேண்டும்? நூல் எழுதும் ஆசிரியர் எத்தன்மையராயிருத்தல் வேண்டும் என்பதுபற்றி ஆராயவேண்டுவது அறிவுடையார் கடனன்றோ?

நூலானது குன்றக்கூறல் முதலிய குற்றங்கள் சிறிதுமின்றி, சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகு பத்தும் அமையப்பெற்றிருத்தல் வேண்டும். "நவிறொறு நூனயம் போலும்" என்ற ஆன்றோர் கூற்றுப்படி, கற்பவர்கட்குச் சிறிதும் வெறுப்புத்தோன்றாமல் படிக்குந்தொறும் இன்பம் பயப்பதாயிருத்தல்வேண்டும். நூல் * என்னும் தனது பெயர்க்கேற்ற வண்ணம் தன்னைப் பயில்பவரது மனக்கோணலை மாற்றிச் செப்பஞ்செய்தல் வேண்டும். தீயொழுக்கம் சிறிதுமின்றி நல்லொழுக்கத்தையே நன்கு கற்பித்தல்வேண்டும். நாம் எக்காரணம் பற்றியாயினும் மனச்சோர்வுற்ற காலத்து நமக்கு ஆறுதலைத்தந்தும், நாம் செல்வச்செருக்கால் தலைதடுமாறி நிற்கும் சமயத்தும் அறியாமையான் தீநெறிச் செல்லுமிடத்தும் நமக்கு நல்லறிவுச் சுடர்

---

* உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா — மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

கொளுத்தியும், நாம் செய்தற்குரிய கடமைகளையும் அவற்றை முடிக்கும் வழியையும் நிறைவேற்றும் பொறுப்பையும் நமக்குப் போதித்தும் நமது உயிர்த்தோழர்களாய் நிற்றல்வேண்டும். "அறம் பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே" என்றபடி தன்னைப் படிப்பவர்கள் அறமுதலிய உறுதிப்பொருள்கள் நான்கினையும் அடையச்செய்வதே நல்ல நூலின் இலக்கணமென்க.

இத்துணைப் பெருஞ் சிறப்புவாய்ந்த நூலையியற்றும் நூலாசிரியர், ஐயந் திரிபறக்கற்றுப் புலமைசான்ற புண்ணியராக இருத்தல் வேண்டுமென இயம்பல்வேண்டுமோ? உயர்குடிப் பிறப்பும், உயிர்கள்மாட் டிரக்கமும், கடவுள் வழிபாடும், கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும், உலக நடையை யறியுமறிவும், உயர்ந்த குணங்களாகிய இவைபோல்வன பிறவும் நிறையப்பெற்றவனே நூலாசிரியனென நுவலுவர் பெரியோர்.

மேலும், எந்த மொழியில் நூலெழுதப் புகுகின்றார்களோ அந்த மொழியில் அவர்கள் நிரம்பிய புலமையுடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பதை யெவரு மறுக்கார். அங்ஙனமே தற்காலத்தில் தமிழ் நூல்கள் சில, தக்கவர்களாலே எழுதப்பட்டுள்ளன. அவை நூலிலக்கணம் சால வமைந்து படிப்பவர்களை இன்பக் கடலில் இறங்கச்செய்கின்றன.

சில நூற்கள் தம் சிறுமையைக்காட்டித் தம் ஆசிரியரை நடுத்தெருவில் இழுத்துவிடுகின்றனவாதலின், அவைகளைப்பற்றியும் அவ்வாசிரியரைப்பற்றியும் இச்சமயம் சில சொற்கள் மொழியாதிருக்க முடியவில்லை.

நல்லாசிரியரை யடுத்து ஐயந் திரிபறக்கற்றுப் புலமை நிரம்பாத சிலரால் எழுதப்படும் போலி நூல்கள், நூலிலக்கணம் அமையப்பெறாததுமன்றி, படிப்பவர்கட்கு நன்மைக்குப் பிரதியாகத் தீமையை விளைத்துவிடுகின்றனவாதலின், அவை பருத்தி நூல் சிலந்தி நூல் தாமரைத் தண்டினூலே. ஒருவிதத்திலுதவுவதும் இடர்விளைக்காததுமான இந்நூற்களை அவற்றிற்கு ஒப்பாக்குவதும் தவறென்றே தோன்றுகின்றது. மேலும், இப் பெரியரால் எழுதப்படும் நாவல் என்னும் சில கதைகளோ! அம்

338

மம்ம! அவை படிப்பவர்களை வெறுங் காமாதுரர்களாக்கி அவர்கட்குத் தீயொழுக்கத்தை யுண்டுபண்ணி அரந்தைக் கடலி லமிழ்த்திவிடுகின்றனவெனின், இதைவிட அவர்கள் உலகத்திற்குச் செய்யும் தீமை வேறென்னையுளது? இவர்களை உலகில் எந்த வகுப்பிற் சேர்ப்பது? கொடிய விலங்குகட்கும் நாம் தப்பியுய்தல் கூடும். நம்மைப்போலவே நம் பக்கலிலே யிருந்து நமக்கு நன்மை செய்பவர் போன்று தீமை யிழைக்கும் இந் நல்லவரினின்றும் நாம் தப்புவதெப்படியோ? கசடறக் கல்லாத இவர்கள் சும்மா இருப்பின், அதுவே உலகிற்குச் செய்யும் உதவியாகும். நிற்க,

வடமொழி பயின்ற சிலர் தமிழ்மொழிப் பயிற்சியின்றியே தமிழில் நூல்கள் எழுதி வெளியிடுகின்றார்கள். அந்தோ! அந் நூல்கள் அறிஞர்க்குக் கான்ற சோறெனக் காணுதற்கும் அருவருப்பைத் தருமென்பதில் ஐயம் யாண்டையது? ஏன்? தமிழ்ப் புலமையின்றித் தமிழில் நூலெழுதுதல் எங்ஙனங் கூடும்? நூலிலக்கணம் எவ்வாறமையும்? வடமொழியில் வல்லுநராக விருக்கலாம். அவர்கள் வடமொழியில் நூலெழுதட்டுமே. அது மணம்பெறும். தென்மொழியிற் புலமை நிரம்பாது தமிழில் நூலெழுத வருவது பரிகசிப்புக் கிடமன்றோ? வடமொழியில் வல்லவர் தென்மொழியில் நூலெழுதக்கூடாதென்று யாம் சொல்ல வந்தோமில்லை. தென்மொழியினும் வல்லவராகி நூலெழுத வேண்டுமென்பதே யெமது கருத்தென்க. அன்றியும், ஒரு நூலில் எழுத்துக் குற்றங்களும் சொற் குற்றங்களும் பொருட் குற்றங்களும் மலிந்து கிடந்து தமிழ் நடையும் சீர்கெட்டிருப்பின், பார்ப்பவர்கட்கு எங்ஙனம் அந்நூற்கண் ஊக்கம் செல்லும்? இதனை அவருணராததென்னே? இவர்கட்குத் தமிழில் அறிவின்மையால் எவரும் வழங்கக்கிடக்கும் எளிய தமிழ் மொழிகளையும் எடுத்தாளுந் திறனற்று வேண்டாத இடங்களிலும் வட சொற்களை வலிதிலிழுத்துப் புணர்த்தி, அமிழ்தினுமினிய நமது தமிழ்மொழி இயற்கை வனப்பை யிழக்கச் செய்கின்றார்களாதலின், இவர்களும் ஒருவிதத்தில் நமது தமிழ் நாட்டிற்குத் தீமை செய்பவர்களே யாவர்.

339

முற்காலத்துப் பிள்ளைப் பாண்டியனும், வில்லியும், ஒட்டக்கூத்தனும் நன்கு கல்லாதவர்களைக் குட்டியும் காதறுத்தும் வெட்டியும் துன்புறுத்தினது வன்கண்மையாகக் கருதப்படினும், இக்கொடுமைகளை நோக்க, இவைகள் உலகில் பெருகாதிருக்கச்செய்த அச்செயலும் ஒருவிதத்தில் நன்மைக்கே காரணமென்று சொல்லத் துணிகின்றோம்.

பத்திராதிபர்.

ரமணி.

ஓர் காதற் கதை.

அத்தியாயம் 4.

(தொடர்ச்சி.)

முகமுழுவதும் விபூதிப் பூச்சு, கண்களை மறைத்துக் கம்பீரத் தோற்றத்தோடிலங்கும் மூக்குக்கண்ணாடி, நெற்றியிற் பாதியை மறைத்துச் சிரத்திற் கவிந்தமர்ந்து ஓர் உடுக்கையைப்போல் இடையிற் சற்றுக் குறுகி மேற்புறம் பரந்தமைந்துள்ள விபூதிபடிந்த ஓர் விசித்திரப் பச்சைக் குல்லா, அடர்ந்து கறுத்து அழகாய் இருபுறமும் வளைந்து சரிந்த விபூதி படிந்த மீசை, நிறத்தில் அந்த மீசையை நிகர்த்து அதனினும் அடர்த்தியாய் மார்புவரையில் வளர்ந்திருந்த விபூதிபடிந்த தாடி, கழுத்திலிருந்து முழங்காலுக்குக் கீழிறங்கிய விபூதிபடிந்த காஷாய அங்கி, பாதங்களைத் தொடும்படி யுடுத்த காஷாய வேஷ்டி, விபூதியணிந்த இடக் கையில் மான் தோலினாலாகிய விபூதிபடிந்த பிரயாணப் பையொன்று, விபூதியணிந்த வலக் கையில் யானை முகம்போன் றமைக்கப்பெற்ற கைப்பிடியுடைய விபூதிபடிந்த அழகிய கோல், கால்களுக்கு மாத்திரம் ஐரோப்பிய நாகரிகத்தின் 'பூட்ஸ்' (Boots) என்ற பாதரக்ஷைகள், பாதரக்ஷைகளின் அடிப்பாகத்திலிருந்து பச்சைக் குல்லாவின் உச்சிவரையில் சுமார் ஆறடி உயரம், சற்றுப் பருத்துத் தோன்றிய தேகக்கட்டு, யாவர் கவனத்தையும் கவரும் ஓர் அற்புத தேஜஸ் மின்னும் முகவிலாசம், இவ்வித லக்ஷணங்கள் வாய்ந்தவர் நமது கதையிற் புதிதாய்ப் புகுந்த ஸந்யாசி. அவர் கொணர்ந்த கடிதத்தை ஜனார்த்தனன் தனக்குள் பின்வருமாறு வாசித் துணரலாயினன்.

340

" அன்புநிறைந்த அத்தான்!

உங்கள் நலத்தையும் சாவித்திரியின் நலத்தையும் கருதி அவளுடைய விவாகத்தைத் தடுப்பதற்குத் தகுந்த யுக்தி யொன்றை ஆலோசிக்கும்பொருட்டு, நான் சென்ற திங்கட்கிழமை இரவு சாவித்திரியை நமது அகத்திற் கழைத்துக்கொண்டு வருவதற்காகப் போனேன். ஆனால் சாவித்திரி யகத்து ஜன்னலருகே வந்தவுடன் தாடகைபோன்ற ஓர் ராக்ஷஸி என் வாயில் துணியைப் புகுத்தி என்னைத் தூக்கி ஓர் ஜட்கா வண்டியில் போட்டுக் கொண்டுபோய் விஜயரங்கதாசருக்குச் சொந்தமாகிய தேனாற்று முகத்துவாரத்துக்குச் சமீபத்திலுள்ள பங்களாவின் மாடியில் ஓரறையில் என்னைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறாள். நான் சாவித்திரியின் விவாகத்தைத் தடுக்க முயற்சித்ததால் அந்த விவாகம் நிறைவேறும் வரையில் நான் இந்தச் சிறையில் அடைபட்டிருக்கவேண்டுமென்பது விஜயரங்கதாசர் கருத்தென்றும், ஆனால் அவருடைய மகன் கண்ணையன் என்ற துஷ்டன் நான் அவனை விவாகஞ்செய்துகொள்ளச் சம்மதித்தாலன்றி என்னை இந்தச் சிறையிலிருந்து வெளிப்படுத்துவதில்லையென்று பிரதிக்கினை செய்திருக்கிறானென்றும் அந்த நீலி சொல்லுகிறாள். நான் இரவில் அகாலத்தில் சாவித்திரி அகத்துக்குப்போனது பிழைதான். ஆனால் உங்கள் நன்மையையே முற்றுங் கருதி நான் அந்தப் பிழையிழைத்தேன். என்னைச் சிறைவைத்திருக்கும் பாதகி நான் சிறையிலிருந்து தப்பித்துக்கொள்ளாதவாறு ஏற்பாடு செய்திருப்பதைத் தவிர்த்து எனக்கு மற்றச் சௌகரியங்களெல்லாம் அமைத்திருக்கிறாள். ஆயினும் நான் சரியாக ஆகாரம் உட்கொள்ளுவதுமில்லை. சரியான நித்திரையும் கிடையாது. எப்பொழுதும் ஏங்கி ஏங்கி ஸ்ரீ ஸரஸ்வதி தேவியைத் தியானித்துக்கொண்டே யிருக்கிறேன். ஆ! தியானத்தின் மகிமையே மகிமை! இப்பொழுதுதான் திடீரென ஜன்னல் வழியாய் ஒரு குருவி என் சிறை யறைக்குள் பறந்துவந்தது. அதே க்ஷணத்தில் " நாராய்! நாராய்! செங்கால் நாராய்! ..." என்ற சத்திமுத்தப் புலவர் பாட்டும் என் ஞாபகத்திற்கு வந்தது. இந்தக் குருவிக்குப் பேசத் தெரிந்திருந்தாலும் என் ஸ்திதியை ஜனார்த்தனருக்குத் தெரிவிக்குமாறு இதைத் தூதாக அனுப்பலாமே யென்றெண்ணினேன். உடனே சாரதாம்பாள் என் புத்தியில் ஓர் யோசனையைத் தோற்றுவித்தாள். சட்டென ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு நமது அம்மணி அனுப்பிய குருவியைப் பிடித்தேன். இக்கடிதத்தை என் புடவையிற் கிழித்துத் திரித்த துணிக் கயிற்றினால் குருவியின் காலில் கட்டி அனுப்புகிறேன். பறவையை அனுப்பிய பாரதி தெய்வம் இக்கடிதத்தையும் உங்களிடம் சேர்ப்பாளென்ற

341

முழு நம்பிக்கையோடிருக்கிறேன். இதைக் கண்டவுடனே சிறிதுந் தாமதியாது இவ்விடத்திற்கு வந்து என்னை விடுவித்து அழைத்துக் கொண்டுபோங்கள். நான் திடீரெனக் காணமற்போய்விட்டதால் அம் மாளும் நீங்களும் எவ்வளவு கஸ்திப்பட்டிருப்பீர்களென்று நினைக்க நினைக்க என் சித்தம் சிதறிப் போய்விடும்போலிருக்கிறது. ஐயோ! அத்தான்! என் பிழையை நீங்கள் க்ஷமிப்பீர்களோ என்னவோ என்ற பயமும் சந்தேகமும் என் உயிரை உருக்கிக்கொண்டிருக்கிறது. உங்கள் உள்ளம் சாவித்திரியின் உள்ளத்தோடு இயற்கையாகவே ஓர் அற்புத அன்பினால் பந்தப்பட்டிருக்கிறதென்பது மாத்திரம் சத்தியம். அந்த உண்மையை நான் நன்றாய் அறிவேன். உங்கள் அத்தையம்மாள் உங்களை வளர்த்துவந்ததும் அந்த அம்மாளுக்கு ரமணி என்ற ஒரு பாவி பெண் ணைப் பிறந்ததுமாகிய இரண்டே காரணத்திற்காக நீங்கள் உங்கள் உள் ளத்திலுதித்த இயற்கைக் காதலை மறந்து துறந்து அந்த உள்ளத்தில் உங்கள் அத்தை பெண்பால் ஓர் செயற்கைக் காதலைச் சிருஷ்டிக்க எத்த னிக்கிறீர்கள். ஆனால் இயற்கைக்காதலை மறப்பதும் துறப்பதும், செயற் கைக்காதலைச் சிருஷ்டிப்பதும் சாத்தியமான காரியமன்று. சாவித்தி ரிக்கு விவாகம் என்ற க்ஷணத்திலேயே நீங்கள் வீணை வாசிப்பதை நிறுத் தியதும் உங்கள் முகம் மாறுபட்டதும் அதற்குத் தக்க சான்றாகும். அன்றியும் இயற்கைக்காதலை மறக்க முயல்வதும் செயற்கைக்காதலைச் சிருஷ்டிக்க முயல்வதும் தருமமுமன்றென எனக்குத் தோன்றுகிறது. இவ்விஷயங்களையும் மற்றும் பல விஷயங்களையும் ஆலோசித்துத்தான் நான் இரவில் தனிமையாய்ச் சாவித்திரி வீட்டுக்குப்போகத் துணிந்தேன். நான் அவ்வளவு துணிவுற்றது குற்றமென்று இப்பொழுதுதான் எனக் குத் தோன்றுகிறது. அந்தக் குற்றம் க்ஷமிக்கக்கூடியதாயினும் க்ஷமிக் கக்கூடாததாயினும், நீங்கள் இந்தப் பயங்கரச் சிறையினின்று என்னை விடுவித்துவிட்டுப் பின்பு எவ்வாறேனும் என்னைச் சிக்ஷியுங்கள். உங்கள் வரவைப் பேராவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

20 – 4 – 1899. ரமணி."

கடிதத்தை வாசித்து முடித்துவிட்டு, "இந்தக் கடிதம் உங்களுக் கெப்படி அகப்பட்டது?" என ஆவலுடன் வினவினன் ஜனார்த்தனன்.

"நான் இன்று மாலை தேனாற்றுக் கரையோரமாய்ப் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது விருக்ஷக் கிளை யொன்றோடு ஒரு குருவியின் கால்கள் துணிக் கயிற்றினால் சிக்கிக்கொண்டிருப்பதையும் அந்தப் பக்ஷி தன்னை விடுவித்துக்கொள்வதற்காகத் தன் சிறகுகளை டப டபவென அடித்துக்கொண்டிருப்பதையும் பார்த்து விருக்ஷத்திலேறிச்

செவ்வையாய்க் கவனித்தபோது குருவியின் கால்களில் கட்டிய கயிற்றில் ஒரு கடிதச் சுருள் கட்டியிருப்பதையும் கண்டேன். பின்பு சிக்கலை அறுத்துக் குருவியை விடுவித்துவிட்டுக் கடிதச் சுருளோடு தாழ இழிந்து சுருளைப் பிரித்தேன். அதற்குள் இரண்டு கடிதங்களிருந்தன. அவைகளின் ஒன்றின்மீது உங்கள் விலாசமிடப்பட்டிருந்தது. அதுதான் நீங்கள் இப்பொழுது வாசித்த கடிதம். மற்றொரு கடிதம் இதோ இருக்கிறது பாருங்கள்" எனக் கூறித் தம் அங்கியிலுள்ள பையிலிருந்து மற்றொரு கடிதத்தை எடுத்து ஜனார்த்தனனுக்குக் கொடுத்தார் சந்யாசி.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

சேர்ந்தாரைக் கொல்லி.

"சேர்ந்தாரைக் கொல்லி" என்பது இருவகையினது. அவற்றுள் ஒன்று புறத்தது. மற்றொன்று அகத்தது. புறத்தேயுள்ள சேர்ந்தாரைக் கொல்லி அக்கினியாம். அகத்ததான சேர்ந்தாரைக் கொல்லி சினமாம்.

அக்கினி யெங்ஙனம் தான் தோன்றற்கிடமாகிய இந்தனுதிகளை முன்னர்க் கெடுத்துக்கொண்டு பின்னர் மற்றைய வஸ்துக்களை நாசமாக்குமோ, அதுபோலச் சினமும் தான் தோன்றுதற்கிடமாகிய அந்தக் காணத்தை முன்னர்த் தகித்துப் பின் தன் காரியத்தைப் புறத்தே செய்யத் தொடங்குகின்றது. ஆகலின் சினமும் சேர்ந்தாரைக் கொல்லியாம். "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி" என்றார் வள்ளுவனாரும். ஆயினும் அக்கினியாகிய புறத்தேயுள்ள சேர்ந்தாரைக் கொல்லிக்கு நாம நம் உணர்வின் வலியால் தப்புதல் கூடும். அகத்ததான சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி நம் உணர்வை நாசமாக்கிக்கொண்டே தோன்றலின் அதனினின்றும் தப்புதல் அரிதாம். ஆதலின் அச்சின வடிவ சேர்ந்தாரைக் கொல்லியானது நமமிட முண்டாகா வண்ணம் முன் ஜாக்கிரதையுடனிருத்தல் அவசியமாகும்.

அங்ஙனம் ஜாக்கிரதைப்படவேண்டியவர்கள் கீழே காட்டப்படுவனபோன்ற பெரியார் வாக்கியங்களை அடிக்கடி சிந்தித்தல் நன்று.

"பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல்கல் லியகோ லொப்பான்
புரிவன புரியப்பட்டுப் புலம்புவ னொத்தார்க் காய்ந்தான்
எரிநர கதனில் வீழ்வ னிழிந்தவர்க் காய்ந்தா னென்றால்
ஒருவர்தம் மிடத்துஞ் சீற்ற முறுமையே நன்று மாதோ."

(பிரபுலிங்கலீலை.)

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்."

(திருக்குறள்.)

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கா லென்."

(ஷை.)

இதோபதேசி.

கலைமகள் துதி.

திருப்பளிங் கனைய செக்கர்வான் பிறைக்குத்
தெவ்வெனத் திகழ்ந்தசெம் பிறையை
உருப்பளிங் கான மணிதொறுந் தெரியூஉ
யாதிதென் றுணர்ந்துழி யுவவா
இருப்பளிங் கௌவளங் கவளைம துளத்து
மீறிலா தென்கணு ணுவும்
பொருப்பளிங் கிதசங் கரனொடு மமர்ந்த
புடைதொறும் பொருந்திவா ழியவே.

கலைமகள்பால் கலைகள்பல கற்றுத் தேர்ந்து கடல்சூழு மிக் காசினியதனிற் கவினுற்று விளங்குங் கல்வியறிவாளர் புனைந்தணியுங் கலாதத்துவ விசேட வறிவாமுள்ளீடு மாமணியணிகளால் ஒளிருங் 'கலைமகள்' எனும் பெயரிய பத்திரிகைச் செல்வியே! நீ நாமகள் நாமம்புனைந்த பண்பால் முதன்முதல் எந்தையார் ஸ்ரீ. கணபதி ஆசாரி அவர்களால் பாடியருளிய திருச்செந்தூர்த் திருவிளையாடற் புராணத்துள் நான்முகன் கிழத்தி பேரில் அமைத்திருக்கு மிச் செந்தமிழ்த் துதிகவியாகிய பூவினை மங்கலப் பொருளென வேற்று அத்தேவியின் பேரருட்டுணையால் என்றும் புதிது புதிதாக நன்மையோடு வாழ்வாயாக.

மாம்ஸ பக்ஷண நிராகரணம்.

ஐயன்மீர்,

மனிதர் எவ்விதம் ஈசுவர சிருட்டிகளின் அமைந்துகிடக்கின்றனரோ அவ்வணமே பட்சி மிருகாதி வருக்கங்களும் அந்நிலைமையில் உட்பட்டவைகளாய் இருக்கின்றன. மனிதர்கள் ஜீவன்போன்றே மற்றைய

பிராணிகளும் அதனை அடைந்துள்ளன. ஆதலால் மானுடர் தங்கள் ஆகாரத்தின்பொருட்டுப் பறவையாதி யீட்டப் பிராணிகளைக் கோறல் புரிந்து அருந்துதல் எவ்வாற்றானுஞ் சீவகாருண்ய நீதியின்பாற் பட்டுளதன்றென நன்குணரற் பாலது.

இந்நியாய சூசனைகளில் மேதாவிகளிற் சில்லோர் புகன்றுவரும் அடைவுகளால் முக்கியமாய்க் கவனித்தற்குரிய நன்மைக ளிரண்டுள. பல்வித ஜீவகோடிகளில் மனிதர் இவ்வுலக வாழ்க்கையில் பகுத்துணர்ந்தறியும் விசேட ஞானமுற்ற பிறப்பினைப் பெற்றோரென்றும், அசுவமேத முதலிய யாகங்களைச்செய்து முற்றுவித்தலால் வரும் புண்ணிய பயன்கள் நன்மைகொல்! தீமைகொல் என ஆராயுங் கோட்பாடுகள் பெற்றுள்ளவரென்றுமாம்.

இவ்விரண்டு பாகுபாட்டில் சாத்திர நியாய முகத்தானும், அடைவு முகத்தானும் என் சிற்றறிவிற் கெட்டிய பான்மைகளை ஈண்டெடுத்துரைப்பான் புக்கனன். ஆகவே விசேட அறிவுளரெனக் கூறும் மானுடர் அற்புத ரீதியிற் சிறந்து விளக்கமுறும் பற்பல சித்திர வைசித்திரிய சூத்திரத் தொழில்களை இயற்றியும், நுண்மதியால் பெறுதற்கரிய கல்வி கேள்விகளாற் பெரும்பேறடைந்தும், மிக மேம்பாடுடைய இராச்சிய பாரச் செல்வத்தில் இகலோக சாம்பிராச்சியப் பதவிகளை வகித்தும், அதனன் வருங் குணுகுணங்களை அனுட்டித்துப் பகுத்துணரும் மாண்பு பெற்றவரென்ப.

இக்கூற்றினை மெய்யென நினைப்புழி, எவையும் பகுத்தறியுமுணர்வு புள், விலங்கு முதலிய ஜீவப் பிராணிகட்கும் உண்டுகொலென ஆராயின், மனிதராற் கண்டு கேட்டறிந்து செய்யப்படுஞ் செயல்களில் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், கல், மரம் இவைகளை முதற் காரணப் பொருளாயமைத்து, பின்னர் அதன் துணைக்காரணங்களாகிய கருவித் துணைகளையும் பெற்றுத் தமது மனோநிலைமைக்குங் கல்வி வன்மைக்கு முரித்தாய விதேன முற்றுவிக்குஞ் சக்தியுடையோரென இதனை வாசிக்கும் அன்புடையார் ஐயப்பாடின்றி அறிவார்.

இனிப் பறவை முதலிய ஜீவப் பிராணிகளில் கண்ணளவிற் சிறியதோர் சிலந்திப்பூச்சி, ஒருவித நுண்ணிய நூல் வலையைப் பின்னிக் கொள்வதாக நாங் காணுகின்றோம். நூல் வலையை இயற்றிவரும் அதன் அருமுயற்சிக்கு யாதொரு முதற்காரணமேனுந் துணைக்காரணமேனுங் கண்டிலேம். அன்றி ஆறுகாற்செந்து, தாம் வசிக்கும் இடமெனக் கொண் டியற்றிவரும் கடதாசியின் தோற்றமுடையனவாய் வெண்ணிறப்

ப்டாஅத்தைத் தாமே நிருமித்துக்கொள்ளுகின்றன. அதனை நம் வீட்டு உத்திரங்களினுந் துலாக்கட்டைகளினும் இன்றும் பாக்கப் பார்க்கலா மன்றோ.

தூக்கணங்குருவிகள், மிக வருத்தமுடன் பார்த்தோர் கண்கள் அருத்திக்கொளப் பெரிதும் இறும்பூதடையும் வண்ணங் கூடுகள் கட்டு கின்றன. அக் குடம்பையுள் தங்கள் பார்ப்புகட் கிரவு ஒளி வேண்டு மென அவாவுற்று மின்மினிப் புழுக்களைக்கொண்டு வைப்பதுண்டெனக் கண்ட நல்லோர் வாய்ச்சொல்லால் அறிகின்றோம்

சிற்றெறும்புகள், எண்ணிறந்தவைகளாய் ஒன்றுசேர்ந்து, அரி திற் செய்துவரும் பன்னிறமுடைக்கோலரக்கும், வேற்றுமைப்பெற்றியில் அமைந்துள ஈக்கள், ஆங்காங்கே நிற்கு மரச்செறிவுகளினும், வேற்றிடங் களினுஞ்சென்று தேடுஞ் செந்தேனையும், சிறுதேன் மெழுகு, பெருந் தேன் மெழுகு எனும் பல பொருட்களையும் அளித்துவரும் நலஞ்சேர் உண்மைகள் பொய்மை ஆகா.

இவ்வாற்றால் மனுடரினும் மிக நுண்ணிய செயலாற் கண்ணிய ரீதியில் முற்கூறிப்போந்த பிராணிகள் நாம் ஒப்புச் சொலற்கரிய செய லில் அருமைபெருமையோ டுழன்று பயனளிக்குந் தொகுதிகள் இவை போல்வன அனந்தமுள.

இத்துணைச் சிறப்பில் இராச்சியபார ஆட்சி முதற் பல பௌருட தோரணைகளைக் குறித்துச் சிந்திக்கில், ஆகாயமார்க்கமாய் நாடியோடித் திரிந்து வருந்திப் பல புட்பங்களின் ரஸங்களை அருந்தியும், அணுவணு வாய் ஈக்கள் தேனைக் கிரகித்துக் கடமளவு ஈட்டிவைப்பதுபோன்று, திரைகடலோடியுந் திரவியந்தேடுஞ் சீமான்கள் முயன்றுழைத்துப் பெரும்பொருள் பெற்றோரெனக் கூறுதல் பெருமையுடைத்தாமோ? நாமும் மேல் உணர்ச்சி அடைந்தோமெனச் செருக்கும் செய்கை என் னணம் மேன்மையுடைத்து?

யானைகள், அவைகளின் ஈட்டங்கட்குத் தலையானை ஒன்றுளது. எறும்புகள் ஒன்றன்பின் ஒன்றாக வொழுங்குற்றுச் செல்லுங்கால் அவை யின் முன்னர்ச் செல்லும் வழிகாட்டி ஒன்றையு மோர்ந்தறிக.

இவ்வாறே யானை முதல் எறும்பீறாக ஒவ்வொரு ஜெந்துக்கட்குந் தலைமைப்பாடு கொண்டொழுகுந் தன்மையுமுளவெனில், வேற்றுமை மயக்கற்ற குணத்தில் ஜீவகோடிகளைப் படைத்த அநாதிமுத்த சித்துரு வாகிய கடவுளின் கருணைப்பெருக்கை என்னென்றுரைப்பாம். அவர் தகைமை யாரானும் வரைந்திடல் நேரிதாமோ?

இனி மனிதர் அளவில் புவனபோக வின்ப நுகர்ச்சியில், ஏனைய ஜீவராசிகள் சுகம் பிராபிக்கின்றனவா என ஆசங்கைபெறின், அன்னத் தூவி யணையிற்சேர்ந்து நித்திரைகொள்ளாது துன்புற்றுக் கவீலுகின்றோரும், பருக்கைக் கற்களிற் சாயுமுன்னரே பிரமானந்த வுறக்கம் பெறுவோரும், அன்றிக் கிருதகுள பாளித போசனத்தை யுட்கொள்ளும் போதே வாந்திசெய்வோரும், புளிங்காடியை மிக மகிழ்வுடன் பருகிச் சுகமுறுவோரும் அநேகருள ருலகினில். ஆதலால், நினைத்தபடி சுகப்பேற்றில் அளவளாய் இறுமாப்புக்கொளும் மானிட ரின்பமும், ஏனைய ஆன்மகோடிகள் இற்றை ஞான்றுந் துய்த்துவரும் இன்பும் ஒன்றுமோ? இதன்கண் மிகுதிப்பாடுள்ளது யாதெனத் தெளிந்துகோடற்கு எவ்வாற்றானு முணர்தல் ஒண்ணாதே.

(இன்னும் வரும்.)

ஜி. சுவாமிநாதன் ஆசாரி.

தமிழ் வித்வான்,

கோட்டாறு.

நன்னெறி.

அலையெறி கடல் புடைசூழ்ந்த அவனியில் "அரிதரிது மானிடராதலரிது" என்றபடி நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்புக்களுள் இம்மானுட ஜன்மம் கிடைப்பது மிக அரிது. அங்ஙனம் கிடைப்பினும் ஐம்பொறிகள் முதலியன ஊனமின்றிப் பிறத்தலும், ஞானம் கல்வி அப்பியசித்தலும், தானம் தருமம் செய்தலும், நன்னெறியில் ஒழுகுதலும் அரிதினுமரிது. மானுடருக்கு முக்கியமானதும் மேலானதும் நன்மையைக் கொடுக்கத்தக்கதும் நல்லொழுக்கமே. மதுரைக் கூடலூர் கிழார் செய்தருளிய முதுமொழிக் காஞ்சியில்,

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என்று கூறப்பட்டுள்ளது.

"ஆசாரஞ் செய்வா ராகி லறிவொடு புகழு முண்டாம்
ஆசார நன்மை யானு லவனியிற் றேவ ராவர்
ஆசாரஞ் செய்யா ராகி லறிவொடு புகழு மற்றுப்
பேசார்போற் பேச்சு மாகிப் பிணியொடு நரகில் வீழ்வார்"

என்ற பெரியோர் வாக்கும் இதனை நன்கு விளக்கும்.

திரிகரணமாகிய மனம், வாக்கு, காயம் இம்மூன்றும் நன்னெறியிற் செல்லவேண்டும். கோயில் வலம்புரிதல், தவம்புரிதல், தானம்செய்தல் இவை காயத்தின் நல்லொழுக்கம். அருணினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று இவை மனதின் நல்லொழுக்கம். மெய்சொல்லல், இனியவை கூறல், பயன்படுசொற் பகர்தல் இவை வாக்கின் நல்லொழுக்கம். இம்முக்கரணங்களும் ஒரே வழியில் நிற்றல் வேண்டும். அங்ஙனம் நில்லாது வேறுபடுமாயின், அது நற்பயனை யடைவதற்கு இடையூறாகும். மீதூண் விரும்பல், நெடுந்துயில்புரிதல், சோம்பலடைதல், நீதிதவறுதல், வஞ்சனை செய்தல், பொய்பேசல், கோள்சொல்லல், கடுஞ்சொற்புகறல், திருடுதல், கள்ளருந்தல், பிறர்பொருளிச்சித்தல், பிறர்தாரம் நயத்தல் இவை முதலியன தீயொழுக்கங்களாம். தானம்புரிதல், தவஞ்செய்தல், ஞானத்தைத் தரும் கல்வி கேள்வி கேட்டல், பழிக்கஞ்சுதல், பிறரையங்நீர்த்தல், பிறர் துயர்க் கிரங்கல், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் இவற்றை விலக்குதல், தந்தை தாயைப் பேணுதல், பணிதல் இவை யாவும் நல்லொழுக்கங்களாம். மேலும், தன்னைப் பெற்றவன், வித்தியாப்பியாசம் செய்தவன், வறுமைக்காலத்தில் அன்னமளித்தவன், ஆபத்துக் குதவிபுரிந்தவன், உபதேசம் செய்தவன் இவர்களைப் பஞ்ச பிதாக்களாகவும், அரசன் றேவி, ஆசாரியன் றேவி, அண்ணன் றேவி, தன் றேவியை யீன்றாள், தன்னை யீன்றாள் இவர்களைப் பஞ்ச மாதாக்களாகவும் கருதவேண்டும். உயிர்களைக்கொன்று, அவற்றின் ஊனையருந்தி உடம்பை வளர்த்தல் கூடாது. திருவள்ளுவநாயனார் திருக்குறளில்,

“ அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று ”

என்றும், பதிபசுபாச விளக்கத்தில்,

“ அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நரகமெனிற் புசித்தவர்க்கென் சொல்லுவதே ”

என்றும் கூறியுள்ளதை நாம் அறிந்திருக்கின்றோம்.

மேலோரிடத்தில் வணக்கமும், கீழோரிடத்தில் அன்பும் உடையவராயிருத்தலுமன்றி, செய்ந்நன்றி மறவாமலும் பிறர் தீங்கியற்றினும் பொறுத்து நன்மையே புரிதலும், விசேட நோன்புகளை அநுட்டித்தலும், வாய்மை தவறாதிருத்தலும், ஐம்பொறி யடக்கலும், பிறர் வாழ்வைப் பார்த்துப் பொறாமை அடையாமலும், பொய்வேடம் பூணாமலும் இருத்தல் வேண்டும்.

" வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்பார் வேடமெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மைவிறல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமோ "

என்பது திருமூலர் திருமந்திரம்.

கொக்கோக முதலிய காம நூல்களைக் கல்லாமல் அறம் பொருள் இன்பம் வீடாகிய நாற்பயனைக் கூறும் சன்மார்க்க நூல்களையே பயிலுதல் வேண்டும்.

" நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
யெல்லை யிலாத சிவம் "

என்றபடி, வேதாந்த முதலிய நூல்களைக் கற்றும் சிவத்தைக் காண்பதரிதெனில், வீண் காலப்போக்காகக் காமநூல் கற்பதனால் என்னபயன் கிடைக்கும்? ஒன்றுமில்லை. ஆதலின், இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அஷ்டாங்க யோகம்புரிதலும், முப்பத்திரண்டு அறங்களைச் செய்தலும், செய்வித்தலும், மண், பெண், பொன்னாசை ஒழித்தலும், ஆணவம், காமியம், மாயையாகிய மும்மல மகற்றிச் சாந்தகுணமா யிருத்தலும், விபூதி, உருத்திராட்சம் அணிந்து மனச்சுத்தியுடன் சிவபெருமானைச் சதாகாலமும் சிந்தித்தலும் நல்லது. திருமூலர் திருமந்திரத்தில்,

" சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே "

என்று கூறியிருக்கிறபடியால், கடவுளை யெப்போதும் மறவாதிருத்தல் வேண்டும்.

" சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல் "

என்ற தெய்வப்புலவர் திருவாக்கின்படி, வாயால் காகம்போல் கத்துவதில் மாத்திரம் பயனில்லை. அதன்வழி நடத்தலே மேலான பயனாகும்.

(இன்னும் வரும்.)

K. முத்துசாமி உடையார்,
உபாத்தியாயர்
பாதாங்கி.

ஓர் வேண்டுகோள்.

1. தியானமென்பது யாது? 2. தியானித்தற்குரியோர் யாவர்? 3. அதற்குரியகால மியாது? 4. தியானத்தின் பயன் யாது? 5. தியானிக்கு முறையாவது யாது?

இவ்விஷயங்களைப்பற்றி நூன்முறையாகத் தெரிந்துகொள்வது மிக்க அவசியமானதாகவும், பல்லோருக்கும் உபகாரமாகவு மிருக்குமென்பதுபற்றி யெழுதலாயினேன். அறிவாளர் தெரிவிப்பின் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன். அருணகிரிநாதர் திருப்புகழில்,

"சரணகமலாலயத்தை யரைநிமிஷநேரமட்டில்
தவமுறைதியானம்வைக்க வறியாத"

என்பதுபற்றி யுண்டாய வேண்டுகோள் இது.

K. ஷண்முகவேலுபிள்ளை,
உடுமலைப்பேட்டை.

இலக்கியப் பகுதி.

மயிலச் சிலேடை வெண்பா

மூலமும் உரையும்.

கO. செல்லார் கொடுமுடியிற் சீரா லயச்சுற்றில்
வல்லாரை யேயு மயிலமே – சொல்லாருங்
கந்தாத்த ரத்தர் களித்தமர்ப ரங்குன்றுங்
கந்தாத்த ரத்தர் களம்.

இ–ள். செல்ஆர் - மேகந்தவழும், கொடுமுடியில் - மலையின் உச்சியில், வல்லாரை - கேட்டைநட்சத்திரம், ஏயும் - பொருந்துஞ் சிறப்பினையும், சீர் - சிறப்புப்பொருந்திய, ஆலயம் - கோயிலுக்கு, சுற்றில் - சுற்றில், வல் - வன்மையையுடைய, ஆரை - மதில்கள், ஏயும் - பொருந்தியிருக்குஞ் சிறப்பினையுமுடைய, மயிலமே - மயிலமலையே, சொல் ஆரும் - புகழ்பொருந்திய, கந்தர் - கந்தரென்னுந் திருநாமத்தையுடையவரும், அ - அந்த, தரத்தர் - புக்குவிகள், களித்து - மகிழ்ந்து, அமர் - இருக்கும், பரங்குன்

ரும்-திருப்பரங்குன்றாகிய, கந்தரம்-குகைகளையுடைய, தரத்தர் - மலையை யுடையவருமாகிய முருகக்கடவுளுக்கு, களம் - இருக்குமிடமாம் எ-று.

"சீராலயச் சுற்றில் வல்லாரையேயும்" என்பதற்கு, சிறந்தகோயி லுக்குச் சுற்றிலும் வல்லாரையென்னு மூலிகை பொருந்தியிருக்குமெனப் பொருள் கூறினும் பொருந்தும். நான்காவதடியில் "கந்தரத்தரத்தர்" என்பதற்கு, மேகமண்டலத்தை யளாவிய மலையையுடையவரென்று பொருள் கூறினும் அமையும்.

கக. ஆவினைந்தா லாட்டுநரு மங்குலவு வேடர்களு
மாவினை யிடிக்கு மயிலமே — மாவணைமா
யன்ப ரவைக்களத்த ரன்றுணர வோமுரைசெய்
யன்ப ரவைக்களத்த ரார்வு.

இ-ள். ஆவின் - பசுவினிடத்துண்டாகிய, ஐந்தால் - பஞ்சகவ்வி யத்தால், ஆட்டுநரும் - (முருகக்கடவுளுக்கு) அபிஷேகஞ்செய்பவரும், மா - மிகுதியாகிய, வினை - பழவினைகளை, இடிக்கும் - உடைத்து நீக்குஞ் சிறப்பினையும், அங்கு - அவ்விடத்தில், உலவு - சஞ்சரிக்கும், வேடர்க ளும் - குறவர்களும், மாவினை - தினைமாவை, இடிக்கும் - இடிக்குஞ் சிறப் பினையுமுடைய, மயிலமே-மயிலமலையே, மா-இலக்குமியை, அணை - சே ரும், மாயன் - விஷ்ணுமூர்த்தி, பரவு - துதிக்கும், ஐ - அழகினையுடைய, களத்தர் - நீலகண்டத்தையுடைய சிவபெருமானார், அன்று - (தம்மை வணங்கிக்கேட்ட) அக்காலத்தில், உணர - அறிந்துகொள்ளும்படி, ஓம் - பிரணவப்பொருளை, உரைசெய் - உபதேசஞ்செய்தருளிய, அன்பர் - அன் பினையுடையவரும், அவை களத்தர் - புலவரிடத்தை யுடையவருமாகிய முருகக்கடவுளுக்கு, ஆர்வு - பொருந்தியிருக்குமிடமாம் எ-று.

ஐந்து என்னுந் தொகைக் குறிப்புச்சொல், (நன் - பெயரி) "ஒன் றொழி பொதுச்சொல் விகாரந்தகுதி, யாகுபெயரன் மொழிவினைக் குறிப்பே, முதறொகை குறிப்போடின்னபிறவுங், குறிப்பிற்றருமொழி யல்லன வெளிப்படை" என்னும் 12-ம் சூ - விதிப்படி, பஞ்சகவ்வியத் தைக் குறிப்பானுணர்த்திற்று. கவ்வியம், கோ சம்பந்தமாயுள்ளவை; பால், தயிர், நெய், கோமயம், கோசலம். கோரோசனமுங்கூட்டிக் கவ்வியம் ஆறு எனவுங் கூறுதலுமுண்டு. "ஆனுதவுமைந்து" என்று திருவிளையா டற்புராணத்தில் மூர்த்திவிசேடம், 24-வது செய்யுளினிடத்துங் காண்க.

கந்தக்கடவுள், வணிகர் பெருங்குடியிற் பூரிகிழார்க்கு உருத்திர சன்மரென்னும் பெயருடன் மூங்கையாயவதரித்து, ஐந்து வயதில் தமி

351

ழினந்தக்காலத்தெழுத்துஞ் சொல்லுமன்றிப் பொருளின்மையாற் பாண்டியனுஞ் சங்கத்தாரும் வேண்டிக்கொள்ளச் சொக்கநாதர் அன்பினைந்திணை முதலாக வறுபது சூத்திரமாகப் பொருள் செய்தார். அதற்கு மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்செய்த மெய்யுரைகாண இறையனார் அருள்செய்தபடி கண்ணீர்வார மெய்ம்மயிர் சிலிர்ப்பப் பலகையிலிருந்து சங்கத்தாரறியும்படி குறிப்பிற் பொருளுரைத்தனராகலின், அம் முருகக்கடவுளை அவைக்களத்தரென்றும்.

பு. அ. பெரியசாமிப்பிள்ளை.

ஓம்:

திருவண்ணாமலை
பிராமண சுவாமிகளென வழங்கும் ஸ்ரீ ரமணரிஷிகள்
திருத் தசாங்கம்.

---

1. சீராருந் தத்தாய் திருவருணை யெங்குரவன்
ஏராரு நாம மெடுத்துரையாய் — தாராரும்
வெட்டவெளி யாடுகின்ற வேத னிரமணனுக்
கிட்டதெல்லாம் பேரென் றியம்பு.

2. பூவிளங்குந் தண்டார்ப் பொழிற்கிளியே பொன்னருணைக்
கோவிளங்கு நன்னாடு கூறிடாய் — மேவி
அருணாடு கொண்ட வமலர்க்குச் சொந்த
திருநாடு வேறுண்டோ செப்பு.

3. தேனிருக்கும் வாய்க்கிள்ளாய் தேவன் றிருச்சுழியற்
கோனிருக்கு நல்லூர் குறித்திடாய் — வானிருக்கும்
புத்தேளிர் மண்ணவருட் போதகுகை யாயமர்ந்த
சித்தமே யூராந் தெளி.

4. செய்யவாய்ப் பைம்பொற் சிறையஞ் சுகமேநம்
மையனரு ணைக்குரவ னாறுரையாய் — வெய்யமலப்
பந்தங் கழுவப் பரானந்தம் பாய்வெள்ளம்
வந்திழியு மாறுகு யால்.

5. பச்சைப் பசுங்கிளியே பன்னுமரு ணைக்குரவன்
மெச்சும் பிறங்கல் விளம்புவாய் — உச்சிதவே
தாந்த நிலைய தனிக்கடவுட் கேயுப
சாந்தம் வரையென்பர் தாம்.

6. என்னின் று நீங்கா வெழிலஞ் சுகமேநம்
மன்னனரு ணைக்குரவன் வாம்பரியென் — இன்னலுறு
தேகாதி பற்றறுத்த தேவர் பணிபெருமாற்
காகாய மேபுரவி யாம்.

7. தண்டார்ப் பொழிற்றத்தாய் சற்குருமாற் றாருயிரைக்
கொண்டேகு வெந்தானை கூறிடாய் — மண்டலத்தில்
தொல்லை வினைக ணைிஞான சத்தியே
வெல்லும் படையாம் விளம்பு.

8. திருவா ரிளங்கிளியே தேனு ருணைக்
குருமுன் னெலிமுரசங் கூறாய் — தருமன்
உளமோடு மெய்வாடப் பேரின்பத் தோங்கி
விளங்குநா தப்பறையா மேல்.

9. ஆசின் மொழிக்கிள்ளா யன்பரித யக்குரவன்
நேசிக்கு மெய்த்தார் நிகழ்த்துவாய் — காசினியில்
அன்புவிழி நீர்ததும்பு மாசாதி நாற்கவிஞர்
இன்சொற்பா மாலையென் றெண்.

10. தீதிலா வின்சொற் செழுங்கிளியே செய்யருணைக்
கோதிலார் கொண்ட கொடிகூறாய் — வாதின்றித்
தான்றனியாய் நின்ற தயாபரனென் றோர்வதற்குக்
கோன்கொண்டான் மோனக் கொடி.

முற்றும்.

செந்தமிழ்க்கவி

K. V. இராமசந்திர ஐயர்,

திருவண்ணமலை.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

வடத்தாற் கூபத்துறும் உருளை யுருள்வதொப்ப மனத்தாற் பாதலத் திருந்து பூதலத்தும், பூதலத்திருந்து பாதலத்தும் சுழலுகின்றோம்.

அணுருற்றும் அகப்படுத்தப்படா அகப்பேய் அழலினும் அழற்றுவ தாயும், கிரியினும் மிகுதுயருற்றுக் கடக்கத்தக்கதாயும், வயிரமணியினும் வலியதாயும் இலங்கும். தனக்கயிலத்தக்க தசையின்கண்ணே விகங்க மானது விழைவுறுவதேபோல, மனம் விடயங்களிடத்தே விரைவில் விழைவுறுகின்றமையின் நீணாட் பயில்வுற்ற நன்னடத்தையை, பாலகன் ஒருகாலுற்ற ஆடனிமித்தமாய் நெடுநாட் பயின்ற கல்வியை யிழப்பதே கடுப்பக் கணத்திலிழக்கும்.

சடவியற்கையதும், மிகச் சஞ்சலமுற்றதும், விரிவுறு கற்பனை களைச் சுழிகளாயுடையதும், காம முதலிய பகைவராய அரவங்களையுடை யதும் ஆய மனமெனு மாழியானது நம்மனோரை நெடுந்தூரங்கொண்டு சென்றாழ்த்துகின்றது. கடலைக் குடித்து, மேருவைப் பெயர்த்து, எரியை விழுங்கி யேப்பமிடுவது மெளிதாம்; இம்மனத்தை யடக்கி யொடுக் குவதோ அதிகஷ்டம் அந்தோ அதிகஷ்டம். எல்லாப் பொருட்கு மேதுவா யிலங்கும் இவ்வுள்ள மிருப்பின் எல்லா வுலகமுமிருக்கும், இஃதொழியின் யாவுமே யொழியும்; ஆதலின், தீய நோயை நேயமருந்தாற் தீர்ப்பதே போல இச் சித்த நோயையும் யத்தனம் பலவால் நூக்கல்வேண்டும்.

பெருங் கிரியின்கண்ணே அருமடவிகள் உண்டாவதேபோல இச் சித்தத்தினின்றும் அளவறுமரிய வின்ப துன்பங்களுண்டாம். இச்சித்தம் விவேகத்தால் வாதனையொழித்து வறுத்வ வித்தொக்குமேலாயினே சூக்குமமுற்றுப் போக்கறு பதமுறும், உறவே இன்ப துன்பங்க ளிறை யேனு மிராது நீங்குமென நினைதற் பாலதாம்.

முத்தி விருப்பினராய நன்னெறியுற்றார் எவ்வுள வெற்றியாற் சாந்தி முதலிய குணங்கள் தம் வயமாமென அவாவுகின்றனரோ அவ் வுளப் பகைவனை இவ்வெழிற் காயத்தின்கண்ணே வெற்றிகொள்ள விடா முயற்சி யுறல்வேண்டும். மூர்க்கரும் அசுத்த சித்தரும் மகிழ்வுறுந் திரு வின்கண் வைராகமுற்று மகிழ்வுறா திருத்தல் வேண்டும்.

354

“இத்தேகத்தேயான்மனையறியின் இன்பவுண்மையையெய்துவனன்றி
மெத்தத் திரியின் மேலாநாசமாம்”

என்னுஞ் சுருதியையும் ஈண்டு நினைக.

இனி யெல்லாப் பாவங்கட்கு மேதுவாயும் எளிமை உலோபம் மரணம் என்பவற்றை யீவதாயும் எல்லா வுயிர்கட்கும் மயலைப்புரிவதாயும் வளரும் வாளா அவாவால் வருந் துயரறிவிப்பாம்:—

பரமப் பிரேமைக் கிருப்பிடமாய ஆன்மதத்துவத்தையும் இதயத் தெழு மெழில் விவேகத்தையும், சாந்திமுதலவற்றையும் ஆச்சாதனஞ் செய்யும் ஆசையென்னும் அருமிருட்டிரவில் இராக முதலிய கோட்டா னீட்டம் உயிர்வெளியில் விளையாடல்புரியும்.

மோகமா மிருட்டினுன் மூடப்பட்டதும் ஆராய்வற்றதும் ஆய நம துள்ளத்திடையாம் பேரிடர்க்காட்டில் ஆசைப் பிசாசம் அசைந்தசைந் தந்தோ அளவறுகூத்தை யாக்குகின்றதுவே.

பிறர்தமைவைதல் பொய்தமைப் பேசுதல் முதலிய ஒலிகளான் முற்று நிறைவுற்றதும், பிரவிருத்தியாங் கல்லேர்லங்களுற்றதும், விடயம்விட்டு விடயந் தாண்டு மியற்கைத்தாயதும் ஆகிய அவாநதியானது உவாமதியொக்கத் திருநீருல் நிறைவுற்ற வித்தேகமா மலையினின்றும் திரள்திரளாய்ப் பெருகி வழிகின்றது.

தஞ் சஞ்சலத்தைத் தடை மிகப் படுத்தித் தருமமேகமாஞ் சமாதியிற் கிடைக்கும் இன்சுவை யிரசத்தை மாந்திக் களிப்புற முயலும் உளச் சாதகப்புள், தூளியாற் கறுத்த துகட்பெருங் காலால் மக்கினத் திருணம் மருளுறல்போல இராசத குணத்தாற் கலக்கமடைந்த ஆசையினுலே அயோக்கிய விடயத் தெள்ளித் தள்ளப்பட்டேமாக்கும்.

(இன்னும் வரும்.)

வீர. சு.

நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

55. ஸ்தூலாருந்ததி நியாயம்: — ஸ்தூலம் – பெரிது, அருந்ததி – அருந்ததி என்னும் சூக்ஷ்ம நட்சத்திரம், நியாயம் – திருஷ்டாந்தம். இது ஸ்தூல வஸ்து தரிசன வாயிலாகச் சூக்ஷ்ம வஸ்து தரிசனஞ் செய்வித்த விதுபோலவென்கின்றது. அதாவது: அருந்ததி என்னும் சூக்ஷ்ம

நக்ஷத்திரத்தை யொருவனுக்குத் தரிசிப்பிக்கவேண்டின் அதற்கணித்தா யுள்ள பெரிய நக்ஷத்திரங்களை முன்னர்த் தரிசிப்பித்துப் பின் அருந்ததி தரிசனஞ் செய்வித்தல்போல வென்பதாம்.

56. கோக்ஷீர நியாயம்: — கோ – ஆ, (பசு) க்ஷீரம் – பால், நியாயம் – திருஷ்டாந்தம். இது தேகோபாதி பலநிறத்தனவாயினும் உபகித ஆத்மா ஒன்றேயாத லிதுபோலவென்கின்றது. அதாவது: ஆக்கள் பல நிறமாயினும் அவைகளின்பால் ஒருநிற மாதல்போலவென்பதாம்.

57. ஹம்ஸ க்ஷீரோதக நியாயம்: — ஹம்சம் – அன்னப்பறவை, க்ஷீரம் – பால், உதகம் – நீர், நியாயம் – திருஷ்டாந்தம். இது குண தோஷங்கள் கலந்துள்ள விடத்துத் தோஷத்தை நீக்கிக் குணத்தைக் கோடல் இதுபோலவென்கின்றது. அதாவது: அன்னப்பறவை பாலோடு கலந்த நீரை நீக்கிப் பாலைக் கிரகித்தல்போல வென்பதாம்.

58. கண்ட சாமீகர நியாயம்: — கண்டம் – கழுத்து, சாமீகரம் – பொற்பணி, நியாயம் – திருஷ்டாந்தம். இது அடைந்துள்ளவற்றின் அடைவு இதுபோலவென்கின்றது. அதாவது: ஒருவன் தன் கழுத்தில் அணிந்திருந்த பொன்னாபரணத்தை மறதியால் தேடுகையில், அதை அவனது ஆப்தனொருவன் கண்டு இதோ உன் கழுத்தில்தானே அவ்வாபரண மிருக்கின்றதேயென, அதனால் அவன் அவ்வாபரணத்தைப் புதிதாயடைந்தவன்போலானான் (மகிழ்ந்தான்.) இதுபோலவென்பதாம்.

59. குணோப சம்ஹார நியாயம்: — குணங்களை ஒருங்குகூட்டல் திருஷ்டாந்தம். இது அநேக ஸ்தானங்களில் கூறப்பட்டுள்ள குணங்களை ஓரிடத்தில் ஒருங்குசேர்த்துக் கூற லிதுபோலவென்கின்றது. அதாவது: பத்துப்பேர் ஒன்றாகூடிப் பேருக்கு ஆயிரம் ரூபாய் முதல்வைத்து வர்த்தகஞ் செய்யும்போது, அவர்களில் ஒருவனைக் கண்டு நீ யெத்தனை ரூபாய் முதல்வைத்து வர்த்தகஞ் செய்கின்றனையெனக் கேட்கின், அவன் தன்னுடன் சேர்ந்துள்ள மற்ற ஒன்பதுபேரும் வைத்திருக்கும் ரூபாய்களையும் தான் வைத்த ரூபாயுடன் ஒன்றாய் மனதிலெண்ணிப் பதினாயிரம் ரூபாய்களுக்கு வர்த்தகஞ் செய்கின்றேன் என்று சொல்வதுபோலவென்பதாம்.

(தொடரும்.)

அநந்தபத்மநாபஸ்வாமி

காஞ்சீபுரம்.

சமாசாரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குத் தலைவராயிருந்த பாலவனத்தம் ஜமீன்தார் பாண்டித்துரை தேவருக்குப் பிறகு அத்தலைமை வகித்த S. சுப்ரமண்ய ஐயரும் காலமாய்விட்டபடியால் இப்போது இராமநாதபுரம் ராஜா மேற்படி சங்கத்தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

பூனை வளர்க்கும் நாய்கள்.

நாய்க்கும் பூனைக்கும் இயற்கையில் பகையென்பதற்கு மாருக, லண்டன் பட்டணத்தில் ஆள்பிரட்ஸ்டான் என்னும் ஓர் ஐரோப்பியர் ஒரு பெண் பூனையால் மூன்று நாய்க்குட்டிகளுக்குப் பால்கொடுப்பித்து வளர்த்துவருகின்றனராம்.

அதிசய ரத்னங்கள்.

ஜெர்மன் தென்மேற்கு ஆப்பிரிக்காவில் சமீபத்தில் ஒரு அதிசயமான ரத்தினக்கல் கிடைத்ததாம். அது சூரிய வெளிச்சத்தில் தங்கநிறமாகவும், விளக்கு வெளிச்சத்தில் பச்சைநிறமாகவும் காணப்படுகிறதாம். ஜெர்மன் சக்ரவர்த்தியால் தமது பெருமாட்டிக்கு அது பரிசளிக்கப்பட்டிருக்கிறதாம். ருஷியா தேசத்து ஸைபேரியாவில் அகப்பட்ட ஸாரீ யென்னும் மற்றொரு ரத்தினக்கல் பகலிற் பச்சையாகவும் காணப்படுமாம்.

ஒரு பன்றியை விழுங்கின பாம்பு.

சமீபத்தில் சாங்காங் என்னுமிடத்தில் ஒரு பெரும் பாம்பு இந்திய ரொருவரால் சுட்டுக் கொல்லப்பட்டது. அப்பாம்பின் நீளம் 22 அடி, சுற்றளவு 14 அங்குலம். அதன் வயிற்றில் 46 ராத்தல் நிறையுள்ள ஒரு பன்றி யிருந்ததாம். பன்றியும் பாம்பும் சேர்ந்து மொத்தம் 100 ராத்தல் நிறையிருந்ததாம்.

பேசும் கடிகாரம்.

ஜெர்மனியின் தலைநகராகிய பெர்லினில் ஒருவர் பேசும் கடிகாரம் ஒன்று செய்திருக்கிறாராம். அது கால்மணிநேரத்துக் கொருதரம் காலத்தைச் சொல்லுமாம். அதாவது 10 மணி, $10\frac{1}{4}$ மணி, $10\frac{1}{2}$ மணி என்று இப்படிச் சொல்லுகிறதாம்.

இந்திய சிலோன் இருப்புப்பாதை.

இந்தியாவுக்கும் சிலோனுக்கும் போடப்பட்டிருக்கும் இருப்புப் பாதையின் திறப்புதினம், பிப்ரவரி மாதம் 25-ம் தேதியன்று தனுஷ்கோடியில் கொண்டாடப்படுமாகையால் அவ்விடத்திற்கு சென்னை கவர்னரும் சிலோன் கவர்னரும் வந்து கூடுவார்களென்று சொல்லப்படுகிறது.

சிவிங்கிப் புலியின் தீயசெயல்.

ஈஸ்டு இந்தியன் ரெயில்வேயைச்சார்ந்த டிரைவர் முதலானோர் ஜாஜா என்னும் ஸ்டேஷன் காம்பவுண்டில் வசிக்கிறார்கள். சில தினங்கட்கு முன் விடியற்காலையில் மாட்டுக் கவணையில் ஒரு பெண் கூக்குரலிடும் சத்தத்தைக் கேட்டு ஷை ரெயில்வே ஆபீசர்களுள் ஒருவரான மிஸ்டர் பர்ஜஸ் தம் துப்பாக்கியுடன் ஓடிப் பார்க்க அங்கு ஒரு ஸ்திரீயைச் சிவிங்கிப் புலியொன்று கீழே தள்ளிப் பற்களாலும் நகத்தாலும் பிடுங்கிக் கிழவதைப் பார்த்து உடனே புலியைப் பார்த்துச் சுட, ரவையானது புலியின் ஒற்றைக் கண்ணின் வழியாக ஊடுருவிச் சென்றது. அதனால் புலி இரண்டொரு நிமிஷம் மதிமயங்கி நின்று பின்னர் சமையலறைக்குள் சென்றது. அது போய்விட்டதென்று நினைத்த வேலைக்காரர்கள் சமையலறைக் கதவைத் திறக்க உள்ளே பதுங்கியிருந்த புலியானது ஒரு வேலைக்காரன்மீது பாய்ந்துவிட்டது. இதற்குள் மிஸ்டர் பர்ஜஸ் அவர்கள் மற்றொருமுறை புலியைப் பார்த்துச் சுடவே உடனே அப்புலி அவர்மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து சாயப்படுத்த ஆரம்பித்தது. ஆயினும் மிஸ்டர் பர்ஜஸ் சிறிதும் அஞ்சாது சிவிங்கியுடன் கைகலந்து சண்டையிட்டு அதைக் கீழே தள்ளித் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றுவிட்டார். இப்பொழுது அவரும் அவரது வேலைக்காரர்களும் ஆஸ்பத்திரிச் சிகிச்சையிலிருக்கிறார்கள்.

பத்திரிகை வரவு.

சுகாபி விருத்தினி.

இது புதுவையில் பக்ஷத்துக் கொருமுறை பிரசுரமாகும் ஓர் தமிழ்ப் பத்திரிகை. சுகாபிவிருத்திக்குரிய விஷயங்களும் இராஜதந்திரம் முதலிய பல விஷயங்களும் இதில் எழுதப்படுகின்றன. இதன் வருஷ சந்தா ரூபாய் 1 – 8 – 0.

இந்தியன் அட்வர்டைசர்.

இது புதுவையில் வெளியாகும் ஓர் மாதாந்தப் பத்திரிகை. இதில் தமிழ் ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய மூன்று பாஷைகளில் பல விஷயங்கள் எழுதப்படுகின்றன. விளம்பரம் பிரசுரிப்பதற்கு ஏற்றது. இதன் வருஷ சந்தா ரூபாய் 1 – 0 – 0.

இப்பத்திரிகைகளைப் பொது ஜனங்கள் ஆதரிப்பார்களாக.

விசுவ கர்ம குலோபகாரி.

இது சென்னை சிந்தாதிரிப்பேட்டை விசுவ கர்ம வேதாத்தியயன பாடசாலையினின்றும் வெளிவரும் ஓர் மாதாந்தப் பத்திரிகை. இப்பத்திரிகை தன் பெயர்க் கேற்றபடி விசுவ கர்ம குலாபிவிருத்திக்கு இன்றியமையாத பல விஷயங்களையும் மற்றும் பொதுநன்மையைக்கோரிய பல விஷயங்களையும் புனைந்து உபகாரியாகவே விளங்குகின்றது. இதன் வருஷ சந்தா ரூபாய் 3 – 0 – 0.

விசுவ கர்மன்.

இது சென்னையிலிருந்து வெளிவரும் ஓர் மாதாந்தப் பத்திரிகை. இதில் விசுவ கர்ம குலத்தின் முன்னேற்றத்தைக்கோரிய அரிய பெரிய விஷயங்களும் மற்றும் பொதுநன்மையைக்கோரிய விஷயங்களும் தக்கவர்களால் எழுதப்படுகின்றன. இதன் வருஷ சந்தா ரூபா 2 – 0 0.

குலாபிமானச் செல்வர்கள் யாவரும் இப்பத்திரிகைகளை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.